# Frequently Asked Questions

1. தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க அங்கீகரிக்கப்பட்ட தேர்வாணைய இணையதள முகவரிகள் என்னென்ன?

   www.tnpscexams.net, www.tnpscexams.in, www.tnpsc.gov.in

2. நிரந்தரப்பதிவினை மொபைல் மூலமாக பதிவு செய்யலாமா?

   கூடாது. நிரந்தரப்பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் ஆகியவற்றை கணினி, மடிக்கணினி மூலமாக மட்டுமே பதிவு செய்ய வேண்டும்

3. நான் நிரந்தரப்பதிவில் பதிவு செய்துவிட்டேன். ஆனால் பதிவினை ஆக்டிவேட் செய்ய எனக்கு OTP வரவில்லை.

   நீங்கள் தவறான மொபைல் ஃபோன் எண்-ஐ பதிவு செய்திருந்தாலோ அல்லது பதிவு செய்த எண் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தாலோ அல்லது உங்களின் மொபைல் ஃபோன் மொபைல் நெட்வொர்கிலிருந்து தொடர்ந்து 4 மணி நேரம் தொடர்பில் இல்லாமல் இருந்தாலோ உங்களது கைபேசி எண்ணுக்கு OTP வராது. நீங்கள் பதிவு செய்த மொபைல் எண்ணுக்கு ஒரு முறை மட்டுமே OTP எண் அனுப்பி வைக்கப்படும்.

4. OTP இல்லையென்றால் நான் எனது கணக்கினை ஆக்டிவேட் செய்ய முடியாதா?

   உங்களது கணக்கினை ஆக்டிவேட் செய்வதற்கான இணைப்பு (link) நீங்கள் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். அதனை கிளிக் செய்தும் தங்களது கணக்கினை ஆக்டிவேட் செய்துகொள்ளலாம்.

5. என்னுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களைத்தான் பதிவு செய்ய வேண்டுமா? மற்றவர்களின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை பதிவு செய்யக்கூடாதா?

   தேர்வாணையம் தங்களது தேர்வு தொடர்பான விவரங்களை, தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்த மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களுக்கு மட்டுமே அனுப்பும். எனவே நீங்கள் மற்றவர்களின் மின்னஞ்சல்

முகவரி மற்றும் மொபைல் எண்களை பதிவு செய்திருந்தால் தேர்வாணையத்தின் தகவல்கள் அனைத்தும் அவர்களுக்கே போய்ச்சேரும்.

6. நான் தவறுதலாக வேறு ஒருவரின் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்-ஐ பதிவு செய்துவிட்டேன். அதனை எப்படி மாற்றுவது?

கவலைப்படத்தேவையில்லை. நீங்கள் உங்கள் நிரந்தரப்பதிவின் கணக்கில் உள்நுழைந்து “Edit Profile” ஐ கிளிக் செய்து மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை மாற்றிக்கொள்ளலாம்.

7. நான் நிரந்தரப்பதிவில் பதிவு செய்து அதற்கான கட்டணத்தினை இணையவழியே செலுத்திவிட்டேன். ஆனாலும் எனக்கு இன்னும் நிரந்தரப்பதிவுக்கான கணக்கு ஆக்டிவேட் ஆகாமல் நிலுவையில் உள்ளது.

பொதுவாக இணையவழியே கட்டணம் செலுத்தினால் உடனடியாக பணப்பரிமாற்றம் நிகழ்ந்து உங்களது கணக்கு ஆக்டிவேட் செய்யப்படும். ஒரு சில தொழில்நுட்ப காரணங்களால் பணப்பரிமாற்றம் நடைபெற்றும் உங்களது கணக்கு ஆக்டிவேட் ஆகாமல் இருந்தால் நிரந்தரப்பதிவில் Applicant Login என்ற பக்கத்தில் “PAYMENT STATUS” ஐ கிளிக் செய்து உங்களது விவரங்களை உள்ளீடு செய்து நீங்கள் எத்தனை முறை பணம் செலுத்தியுள்ளீர்கள் அதில் எத்தனை முறை தோல்வி அடைந்துள்ளது எம்முறை பணப்பரிமாற்றம் சரியாக நடைபெற்றுள்ளது என்ற விவரங்ககளை தெரிந்துகொண்டு அதனை கிளிக் செய்து UPDATE செய்தால் கணக்கு ஆக்டிவேட் செய்யப்படும்.

8. இணையவழியே பணம் செலுத்த முயன்று எனது கணக்கிலிருந்து இரண்டுமுறை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த பணம் திரும்ப எப்படி கிடைக்கும்?

உங்களின் பணப்பட்டுவாடா உறுதி செய்யப்பட்ட பின்னர், கண்டிப்பாக அது உங்கள் வங்கிக்கணக்கிற்கு திருப்பி அனுப்பப்படும். அதற்கு ஓரிரு வாரங்கள் கூட ஆகலாம். ஆனால் நீங்கள் ஒருமுறை இணைய வழியிலும் (ONLINE) மற்றொருமுறை செலுத்துச்சீட்டு மூலமாகவும் பணம் செலுத்தியிருந்தால் அது உங்கள் வங்கிக் கணக்குக்கு திரும்ப வராது.

9. நான் நிரந்தரப்பதிவுக்கான கட்டணம் ரூபாய் 150 ஐ செலுத்தி என்னுடைய கணக்கினை ஆக்டிவேட் செய்துவிட்டேன். இனி நான் தேர்வுக்கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியது அவசியமா?

ரூபாய் 150 என்பது நிரந்தரப்பதிவுக்கான கட்டணம் மட்டுமே. நீங்கள் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படாதவராகவோ அல்லது தேர்வுக்கட்டணச்சலுகை பெற தகுதியில்லாதவராக இருப்பின், குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது அதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணத்தை கண்டிப்பாகச் செலுத்த வேண்டும். இல்லையேல் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10. நான் எனது நிரந்தரக்கணக்கின் விவரங்களை மறந்துவிட்டேன். எனவே நான் புதிதாக ஒரு நிரந்தரக்கணக்கு தொடங்கலாமா?

தேர்வாணையத்தின் அறிவுரைகளின்படி, ஒருவர் ஒரே ஒரு நிரந்தரக்கணக்கு மட்டுமே வைத்திருக்க வேண்டும். தவறான விவரங்களைக்கொடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரக்கணக்கு வைத்திருப்பவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும் அவர்களது விவரங்கள் சான்றிதழ் சரிபார்ப்பின் போது கண்டறியப்படும் என்பதால் தவறான விவரங்களைக்கொடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரப்பதிவுகளை பதிவு செய்ய வேண்டாம்.

நீங்கள் ஏற்கனவே நிரந்தரப்பதிவு செய்து அதன் விவரங்களை மறந்துவிட்டால், தங்களது, பெயர், பிறந்த தேதி, எஸ்.எஸ்.எல்.சி பதிவு எண், எஸ்.எஸ்.எல்.சி சான்றிதழ் எண் மற்றும் தேர்ச்சி பெற்ற மாதம், வருடம் ஆகியவற்றை குறிப்பிட்டு APDTECH2014@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை மனு அனுப்பி நிரந்தரப்பதிவின் பயனாளர் குறியீடை (LOGIN ID) அறிந்து கொள்ளலாம். ;

11. நான் தெரியாமல் தவறுதலாக ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரப்பதிவுகள் செய்துவிட்டேன்? என்ன செய்வது?

தேர்வாணையத்தின் அறிவுரைகளின் படி ஒரு விண்ணப்பதாரர் ஒரே ஒரு முறை மட்டுமே நிரந்தரப்பதிவில் பதிவு செய்ய வேண்டும். தேர்வாணையம் கோரும் மிகச்சரியான விவரங்களை பதிவு செய்தால் ஒன்றுக்கு மேற்பட்ட

நிரந்தரப்பதிவினை பதிவு செய்ய இயலாதபடி விண்ணப்பம் வடிவமைக்கப்படுள்ளது. நீங்கள் தவறான தகவல்களை பதிவு செய்தால் மட்டுமே இரண்டாவது முறை பதிவு செய்ய இயலும். ஒருவேளை தவறுதலாக ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகள் செய்துவிட்டால் எந்தப் பதிவில் சரியான தகவல்களை பதிவு செய்துள்ளீர்களோ அந்த பயனாளர் குறியீட்டினையே அனைத்து தேர்வுகளுக்கும் விண்ணப்பிக்க பயன் படுத்தவும், ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளர் குறியீட்டினைப் பயன்படுத்தி ஒரே தேர்வுக்கோ அல்லது பல்வேறு தேர்வுக்கோ விண்ணப்பித்திருந்தால் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதோடு, தவறான தகவல்களை அளித்திருந்தால் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளிலிருந்து தாங்கள் விலக்கி வைக்கப்படவும் வாய்ப்புள்ளது.

12. நான் நிரந்தரப்பதிவில் தவறுதலாக சில விவரங்களை பதிவு செய்துவிட்டேன். அதனை என்னால் மாற்ற முடியவில்லை. என்ன செய்வது?

நிரந்தரப்பதிவில் உங்களது பெயர், பிறந்த நாள், மதம், மற்றும் ஜாதி ஒதுக்கீட்டு பிரிவு (Communal Category) SSLC பதிவு எண், தேர்வான மாதம் மற்றும் வருடம் போன்ற சில முக்கியமான விவரங்களை நீங்கள் மாற்ற முடியாது. எனவே இவ்விவரங்கைகளை பதிவு செய்யும் போ\து மிகுந்த கவனத்துடன் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னர் ஒரே ஒருமுறை மட்டுமே நீங்கள் ஒரு சில விவரங்களை மாற்றிக்கொள்ளலாம். உங்களால் அவ்விவரங்களை மாற்ற முடிய வில்லை எனில் தகுத்த ஆதாரங்களுடன் apdtech2014@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை மனு அனுப்ப வேண்டும். அதனை பரிசீலித்த பின்னர் உங்கள் தகவல் சரியானதாக இருந்தால் அதனை தேர்வாணையத்தின் உதவியுடன் மாற்றிட இயலும். உங்களது கோரிக்கைகளை நீங்கள் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரி மூலமாகவே அனுப்பவேண்டும்.

13. எனது மின்னஞ்சலுக்கு எத்தனை நாளில் பதில் கிடைக்கும்?

நீங்கள் மிகச்சரியான தகவல்களை கொடுத்திருந்தால், பொதுவாக 48 மணி நேரத்தில் உங்களுக்கு மின்னஞ்சல் மூலம் பதில் அளிக்கப்படும். தகவல்கள் சரியில்லை என்றாலோ அல்லது போதுமானதாக இல்லை என்றாலோ அதற்கு கூடுதல் அவகாசம் தேவைப்படலாம் அல்லது உங்களது கோரிக்கை நிராகரிக்கப்படலாம். தொகுதி 4 போன்ற தேர்வுகளுக்கு அதிகப்படியான

விண்ணப்பதாரர்களிடமிருந்து மின்னஞ்சல் பெறப்படுவதால் அவற்றிக்கு பதில் அனுப்ப கூடுதல் நாட்கள் தேவைப்படும்.

14. மின்னஞ்சலில் அனுப்பப்படும் கோரிக்கை மனுவில் என்னென்ன விவரங்களை அனுப்பவேண்டும்?

முதலின் நிரந்தரப்பதிவில் நீங்கள் பதிவு செய்த மின்னஞ்சல் வழியே மட்டுமே தகவல்களைக் கோர வேண்டும். தங்களின் பெயர், பிறந்த தேதி, உங்களின் பயனாளர் குறியீடு (USER ID), பதிவு செய்யப்பட்ட மொபைல் எண், SSLC பதிவு எண் ஆகியவற்றை தவறாமல் குறிப்பிட்டு எந்த தகவலை எவ்வாறு மாற்றம் செய்ய வேண்டும் என்ற குறிப்புடன் உரிய ஆதாரங்களை இணைத்து மின்னஞ்சல் செய்ய வேண்டும். உதாரணமாக உங்களது பிறந்த நாள் மற்றும் பெயர் ஆகியவற்றில் மாற்றம் செய்ய உங்களது SSLC மதிப்பெண் சான்றிதழை நகலினை அனுப்ப வேண்டும்.

மதம் மற்றும் ஜாதி விவரங்களை மாற்ற விரும்புவர்கள் கீழ்கண்ட தகவல்களுடன் ஜாதிச்சான்றிதழின் நகலினையும் கண்டிப்பாக மின்னஞ்சலில் அனுப்ப வேண்டும்:-

பயனாளர் ஐடி:

மதம்:

ஜாதி பிரிவு (SC / SCA / ST / MBC / DNC / BC / BC M)

ஜாதி உட்பிரிவு:

சான்றிதழ் வழங்கிய அதிகாரி

சான்றிதழ் எண்

சான்றிதழ் வழங்கிய நாள்

மாவட்டம்

வட்டம்

15. பதில் பெறப்படவில்லையெனில் என்ன செய்வது?

கண்டிப்பாக பதில் அனுப்பப்படும். தொழில்நுட்பக் காரணம் உட்பட ஒரு சில காரணங்களால் பதில் கிடைக்கவில்லையெனில் 044-25300309 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறலாம். இது தவிர தேர்வாணையத்தின் கட்டணமில்லாத் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெறலாம்.

16. மேற்படி தொலைபேசி எண்களில் இணைப்பு கிடைப்பது கடினமாக உள்ளதே?

விண்ணப்பதாரர்களின் வசதிக்காக கூடுதலான 5 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் தொகுதி 4 போன்ற மிகப்பெரிய தேர்வுக்கு பல லட்சக்கணக்கில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிப்பார்கள். ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான விண்ணப்பதாரர்கள் மேற்படி எண்களை தொடர்பு கொள்வார்கள். எனவே இணைப்பு கிடைப்பது சற்று கடினமாக இருக்கலாம். பொறுமையுடன் முயற்சி செய்யவும்..

17. நான் தொகுதி 4 க்கு விண்ணப்பிக்க நிரந்தரப்பதிவில் பதிவு செய்துவிட்டேன்? ஆனால் எனக்கு தொகுதி 4 க்கான விண்ணப்ப பதிவு எண் ஏதும் வரவில்லை?

நிரந்தரப்பதிவு என்பது எந்த ஒரு தேர்வுக்கான விண்ணப்பமும் அல்ல. அது தங்களது அடிப்படை விவரங்களை பதிவு செய்து தேர்வாணைய இணையத்தில் தங்களுக்கென ஒரு கணக்கினை தொடங்கிக்கொள்கிறீர்கள். அவ்வளவுதான். இந்த பதிவினை பயன்படுத்தி ஒவ்வொரு தேர்வுக்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். தொகுதி 4 க்கும் தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

18. எனக்கு 18 வயது முடிவடைந்து விட்டது. ஆனால் என்னால் நிரந்த்தரப்பதிவில் பதிவு செய்ய முடியவில்லை. ஏன்?

நடப்பு ஆண்டில் ஜூலை 1 ஆம் நாள், 18 வயது நிறைவடைந்தவர்கள் மட்டுமே எந்த ஒரு தேர்வுக்கும் விண்ணப்பிக்க முடியும். எனவே நிரந்தரப்பதிவும் அதன் அடிப்படையிலேயே பதிவு செய்ய முடியும்.

19. எனது நிரந்தரப்பதிவின் பயனாளர் குறியீடு (USER ID) மற்றும் கடவுச்சொல் (PASSWORD) ஆகியவற்றை மறந்துவிட்டேன்? என்ன செய்வது?

உங்களது பயனாளர் குறியீடு (USER ID) ஐ தெரிந்துகொள்ளவும் மற்றும் கடவுச்சொல் (PASSWORD) ஐ மாற்றிக்கொள்ளவும் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வசதிகள் உள்ளன. அதனை பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்காக தேர்வாணையத்தினை அணுக வேண்டியதில்லை.
https://www.i-register.co.in/tnpscotrpwd/frmForgotPassword.aspx

https://www.i-register.co.in/tnpscotrpwd/frmForgotLoginId.aspx

20. நான் நிரந்தரப்பதிவு செய்யும்போது "Details already exists" என்று செய்தி வருகிறது ஏன்?

நீங்கள் ஏற்கனவே உங்களது விவரங்களை நிரந்தரப்பதிவில் பதிவு செய்திருந்தால் இந்த செய்தி வரும். எனவே ஏற்கனவே பதிவு செய்த தகவல்களை கொண்டு மீண்டும் பதிவு செய்ய முடியாது.

21. பயனாளர் குறியீடு (USER ID) ஐ தெரிந்துகொள்ளவும் மற்றும் கடவுச்சொல் (PASSWORD) ஐ மாற்றிக்கொள்ளவும் முயற்சிக்கும் போது "Invalid User Details" என்ற தகவல் வருகிறது ஏன்?

பயனாளர் குறியீடு (USER ID) ஐ தெரிந்துகொள்ளவும் மற்றும் கடவுச்சொல் (PASSWORD) ஐ மாற்றிக்கொள்ளவும் நீங்கள் ஏற்கனவே பதிவு செய்த சரியான தகவல்களை உள்ளீடு செய்தால் மட்டுமே அதற்கான தகவல்கள் கிடைக்கும். தவறான தகவல்களை உள்ளீடு செய்தால் "Invalid User Details" என்ற தகவல் மட்டுமே வரும். அதற்கு தேர்வாணையம் பொறுப்பல்ல.

22. நிரந்தரப்பதிவு செய்த பின்னர் அதனைப் பயன்படுத்தி தொகுதி 4 க்கும் விண்ணப்பித்து விட்டேன். அதன் பின்னரே சில விவரங்கள் தவறானவை என்று தெரிய வருகிறது? என்ன செய்வது.

ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் முன்னர் உங்களது விவரங்கள் நிரந்தரப்பதிவில் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னர் விண்ணப்பிக்கவும். நிரந்தரப்பதிவில் மாறான தகவல்கள் இருப்பின் அதனை மாற்றம் செய்த பின்னர் குறிப்பிட்ட தேர்வுக்கு விண்ணப்பிக்கவும். தேர்வுக்கு விண்ணப்பித்த பின்னர் தங்களது, பெயர், பிறந்த தேதி, பாலினம், மதம், சாதிப்பிரிவு, சாதிச்சான்றிதழ் விவரங்கள் பிறந்த இடம், மாற்றுத்திறனாளிகள்/ ஆதரவற்ற விதவைகள்/ முன்னாள் இராணுவத்தினர்களுக்கான விவரங்கள், தேர்வுக்கட்டணச்சலுகை விவரங்கள் போன்ற பல விவரங்களை மாற்ற முடியாது. எனவே விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

23. விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பின்னர் சில விவரங்களை மாற்ற கோரி அனுப்பப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுமா?

பரிசீலிக்கப்படாது. எனவே விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

24. எனது பெயரை மாற்றம் செய்துவிட்டேன். அது அரசிதழிலும் வெளியாகியுள்ளது. ஆனால் சான்றிதழ்கள் அனைத்திலும் பழைய பெயர் மட்டுமே உள்ளது. எந்த பெயரில் விண்ணப்பிக்க வேண்டும்?

ஒருமுறை பெயர் மாற்றம் செய்து அது அரசிதழில் வெளியாகிவிட்டால் மாற்றம் செய்த பெயரை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒருவேளை தங்களது விண்ணப்பத்தில் பழைய பெயர் இருப்பின் அதனை சான்றிதழ் சரிபார்ப்பின் போது அதனை தெரிவித்துக்கொள்ளலாம்.

25. நான் தொகுதி 4 தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தேன், ஆனால் விண்ணப்பத்தில் எனது பிறந்த நாள் தவறாக உள்ளது. மாற்ற முடியவில்லை.

தங்களது பெயர், தாய், தந்தை பெயர், பிறந்த தேதி, மதம், பிறந்த இடம், சொந்த மாவட்டம், மதம், சாதி பிரிவு, எஸ்.எஸ்.எல்.சி சான்றிதழ் விவரங்கள் போன்றவை நிரந்தரப்பதிவில் இருந்து எடுத்துக்கொள்ளப்படுவதால் அவற்றை தேர்வுக்கான விண்ணப்பத்தில் மாற்ற இயலாது. அவற்றை நிரந்தரப்பதிவில் மாற்றம் செய்த பின்னரே தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

26. நான் பாண்டிச்சேரி (புதுச்சேரி) ஐ சேர்ந்தவன், எனது தந்தையாரும் புதுச்சேரி. நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பு சான்றிதழை காரைக்காலில் பெற்றுள்ளேன். நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சலுகையினைக் கோர முடியுமா?

முடியாது. தமிழ்நாட்டை சாராத எவரும் இட ஒதுக்கீட்டுப்பிரிவில் ஒதுக்கீடு கோரி விண்ணப்பிக்க முடியாது. அவர்கள் “OTHERS” என்ற பிரிவின் கீழ்மட்டுமே விண்ணப்பிக்க முடியும். தவறான தகவல் தரும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் தேவைப்படின் அவர்கள் தேர்வு எழுதுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

27. நான் தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டுமா?

நீங்கள் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடி வகுப்பினராக இருந்தாலோ அல்லது மாற்றுத்திறனாளி அல்லது ஆதரவற்ற விதவையாக இருந்தாலோ நீங்கள் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களிக்கப்படுவீர்கள். பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தாலே மூன்று முறை தேர்வுக்கட்டணச்சலுகை பெற முடியும். முன்னாள் இராணுவத்தினர் இரண்டுமுறை கட்டணச்சலுகை துய்க்க முடியும். கட்டணச்சலுகையை மூன்று / இரண்டு முறை பயன்படுத்தியவர்கள் அதன் பின்னர் தேர்வுக்கட்டணம் கண்டிப்பாகச் செலுத்த வேண்டும்.

28. நான் ஏற்கனவே ஒரு நிரந்தரப்பதில் மூன்று முறை கட்டணச்சலுகையை பயன்படுத்திவிட்டேன். மீண்டும் ஒரு புதிய நிரந்தரப்பதிவு செய்து மீண்டும் மூன்று முறை கட்டணச்சலுகை பெறலாமா?

ஏற்கனவே கூறியதுபோல் ஒருவர் ஒரே ஒரு நிரந்தரப்பதிவு மட்டுமே செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட நிரந்தரப்பதிவு செய்து அதன் மூலம் இரண்டு அல்லது மூன்று முறைக்கு மேல் கட்டணச்சலுகையை பயன்படுத்தினால் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். தவறான தகவல் கொடுத்த காரணத்திற்காக நீங்கள் தேர்வு எழுதுவதிலிருந்து ஒதுக்கி வைக்கப்படவும் வாய்ப்புள்ளது.

29. நான் தேர்வு மையத்தையும் தேர்வுக்கான பாடத்தையும் மாற்றிக்கொள்ளலாமா?

தொகுதி 4 தேர்வில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் 5 முறை தங்களது விண்ணப்பத்தினை எடிட் செய்துகொள்ளலாம். அதில், கல்வித்தகுதி, தொழில்நுட்பத்தகுதி, தேர்வு மையம், விருப்பப்பாடம் ஆகியவற்றை மாற்றிக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி தேதிக்குப்பின்னர் தங்களது விண்ணப்பத்தை எடிட் செய்ய முடியாது. மேலும் மாற்றம் கோரி பெறப்படும் கடிதங்களின் மீதும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படமாட்டாது.

30. நான் தேர்வுக்கட்டணத்தினை செலுத்துச்சீட்டின் மூலம் செலுத்துவதாக இருந்தால் எத்தனை நாட்களுக்குள் செலுத்த வேண்டும்?

செலுத்துச்சீட்டின் மூலம் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை விண்ணப்பித்த இரண்டு நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

31. நான் தேர்வுக்கட்டணத்தை செலுத்துச் சீட்டின் மூலம் வங்கியில் செலுத்திவிட்டேன். ஆனால் எனது விண்ணப்பம் இன்னும் ஏற்கப்படவில்லை. ஏன்?

செலுத்துச் சீட்டின் மூலம் வங்கியில் அல்லது அஞ்சலகத்தில் செலுத்தும் கட்டணங்களின் பணப்பரிமாற்ற விவரங்கள் தேர்வாணையத்திற்கு வந்து சேர குறைந்தபட்சம் 4 வேலை நாட்கள் ஆகும். எனவே அதுவரை பொறுமையாக இருந்து, உங்களது விண்ணப்பத்தின் நிலை அறிந்து கொள்ளலாம்.

32. நான் தொகுதி 4 க்கு விண்ணப்பிக்கும்போது தவறுதலாக தேர்வுக்கட்டணச்சலுகை கோரி விண்ணப்பித்துவிட்டேன். தற்போது நான் தேர்வுக்கட்டணம் செலுத்த முடியுமா?

தொகுதி 4 தேர்வுக்கு தவறுதலாக தேர்வுக்கட்டணச்சலுகை கோரி விண்ணப்பித்திருந்து தற்போது தேர்வுக்கட்டணம் செலுத்த விரும்புவர்கள் தங்களது விருப்பத்தினை மாற்றி தேர்வுக்கட்டணத்தை இணையவழி (Online) மட்டுமே செலுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது. இது ஒருமுறை வாய்ப்பாக (One Time Opportunity) மட்டுமே அளிக்கப்படும். இவ்வாறு தற்போது தேர்வுக்கட்டணச்சலுகையின் விருப்பத்தை மாற்றி தேர்வுக்கட்டணம் செலுத்துபவர்கள் மீண்டும், இந்த தொகுதி 4 தேர்வுக்கு தனது விருப்பத்தினை மாற்றி தேர்வுக்கட்டணச்சலுகையை மீண்டும் கோர முடியாது. மேலும் தங்களது விருப்பத்தினை மாற்றிய பின் தேர்வுக்கட்டணம் செலுத்தாமலோ அல்லது தொழில்நுட்பக் காரணம் உட்பட பல்வேறு காரணங்களினால் தேர்வுக்கட்டணம் செலுத்த முடியாமல் போனாலோ அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் தாங்கள் செலுத்திய கட்டணமும் விண்ணப்பமும் தேர்வாணையத்தால் ஏற்கப்பட்டுள்ளதா, என்பதை தேர்வாணையத்தின் இணையதளத்தில் தெரிந்து கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.